# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC.142/2022 | Date | : 30.01.2024 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : சங்ககிரி |
| Name | : மோகன் | Calling | : VAO |
| Father / Husband Name | : கோவிந்தன் | Religion | : இந்து |
| Village | : மோரூர் பிட்-2 | Age | : 48 |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 30.01.2024.**

(1ம், 2 ம், 3 ம், 5 ம் எதிரிகள் ஆஜர் . 4 ம் எதிரி ஆஜரில்லை. 4 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

**1.** நான் தற்போது சங்ககிரி வட்டம், மோரூர் பிட் -2 கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 2018 ம் வருடம் சங்ககிரி கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது, 04.07.2018 ம் தேதி காலை 10.45 மணியளவில் சங்ககிரி வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு , சங்ககிரி காவல் நிலைய குற்ற எண். 246/2018 வழக்கின் தொடர்புடைய எதிரிகளை குப்பனூர் பைபாஸ் அருகே கைது செய்து வைத்திருப்பதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு சாட்சிகளாக இருக்கும்படி என்னையும், எனது கிராம உதவியாளரையும் அழைத்ததின் பேரில் நாங்கள் அங்கு சென்றோம்.

2. நாங்கள் அங்கு சென்றபோது, வழக்கின் தொடர்புடைய மகேஸ்வரன் சக்திவேல், லோகேஸ்வரன், சக்திவேல், ஸ்ரீநாத் ஆகியோரை காவல் ஆய்வாளர் கைது செய்துவைத்திருந்தார். காலை 11.10 மணியளவில் வழக்கின் தொடர்புடைய மகேஸ்வரன் என்பவருடைய காவல் ஆய்வாளர் விசாரணை செய்தபோது, அவர் எவ்வித அச்சுறுத்தலோ, ஆசை வார்த்தையோ இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம்

அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சண்முகமும் சாட்சி கையொப்பம் செய்தோம். அதில் எதிரி மகேஸ்வரனிடம் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 2வது சாட்சி கையொப்பம் என்னுடைய உதவியாளர் சண்முகத்தினுடையது ஆகும். **(ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1 வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது .)**

3. பின்னர் ஒரு மணியளவில் எதிரியிடமிருந்து போலிசார் சூரிகத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினர். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 2வது சாட்சி கையொப்பம் என்னுடைய உதவியாளர் சண்முகத்தினுடையது ஆகும். **(கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1 வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது** ) அந்த எதிரிகளில் நான்கு நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். முதலாவதாக அமர்ந்திருக்கும் நபர்தான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த மகேஸ்வரன் ஆவார். (சாட்சி எதிரி மகேஸ்வரனை அடையாளம் காண்பித்தார்) . இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. போலிசார் என்னை அழைத்தபோது நான் கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் தான் சென்றேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு சென்றதை உரிய பதிவேட்டில் பதிவுசெய்துள்ளேனா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னுடைய அலுவலக முத்திரையிடவில்லை என்றால் சரிதான். நான் போவதற்கு முன்பு எதிரிகளை காவல்துறையினர் அச்சுறுத்தினார்களா மற்றும் துன்புறுத்தினார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த இடத்தில் வைத்து வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது என்றால் குப்பனூர் பைபாஸ் சாலையில் வைத்து பதிவுசெய்யப்பட்டது.

2. கத்தி என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக போலிசார் என்னை விசாரணை செய்தபோது தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். கத்தியை எங்குவைத்து கைப்பற்றப்பட்டது என்றால் குப்பனூர் பைபாஸ் சாலையில். நான் சொல்வதுபோல் குப்பனூர் பைபாஸ்சுக்கு நான் செல்லவில்லை என்றும்,

காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்காக காவல்நிலையத்தில் வைத்து மேற்படி கையொப்பங்களை செய்தேன் என்றும் போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம். மோகன்

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2024.01.30 20:07:15 -1000

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.